# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

### OS. No. 88/2016 உ/இ 123/2023 நாள்.19.1.2026

### PW1- திருமதி. சுசீலாமேரி த/பெ. திரு. சவேரியார்

1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் சொத்து கேட்டு. 1 ஆம் பிரதிவாதி ஆரோக்கிசுந்தரம் எனக்கு எதிராக தொந்தரவு செய்யக்கூடாது என்று வழக்கு போட்டாரா என்றால் ஆமாம். அ அட்டவணை சொத்து புதுப்பட்டி கிராமம் 10 அயிட்டம் போட்டுள்ளேன் என்றும் புல எண் 196A/8C இல் ஆரோக்கியசாமிசுந்தரம் வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்றால் ஆமாம் எல்லோரும் அதில் இருந்தோம். என்னுடன் பிறந்தவர் எத்தனை பேர் என்றால் ஆறுபேர் அவர்கள் எலிசபெத்மேரி, ஆரோக்கியசாமிசுந்தரம், அடுத்து நான் சுசீலாமேரி, ஆலிஸ்மேரி, ஜான்கென்னடி, சின்னம்மாள். இதில் ஆரோக்கியசாமிசுந்தரம் என் னவேலை பார்த்தார் என்றால் BHEL இல் வேலை பார்த்தார். எந்த ஆண்டிலிருந்து வேலை பார்க்கிறார் என்றால் தெரியாது. 1980 களில் வேலைபார்த்தாரா என்றால் தெரியாது. ஜான்கென்னடி என்ன வேலை பார்க்கிறார் என்றால் சாமியாராக உள்ளார். பெண்பிள்ளைகள் எங்கெங்கு திருமணம் செய்து கொடுத்தார் என்றால் அக்கா எலிசபெத்மேரியை தச்சங்குறிச்சியில் திருமணம் செய்து கொடுத்தார், என்னை கோட்டைகாட்டில், ஆலிஸ்மேரியை திருவளர்ச்சிபட்டியிலும், சின்னம்மாளை மளபட்டியில் திருமணம் செய்து கொடுத்தார்கள். பெண்பிள்ளைகள் எல்லாரையும் புதுகோட்டை மாவட்டத்தில் திருமணம் செய்துகொடுத்தார் என்றால் ஆமாம். அ அட்டவணையில் சொத்து 2 வது அயிட்டம் ஆரோக்கியசாமிசுந்தரம் பெயரில் உள்ளது என்றால் ஆமாம். மற்ற சொத்துக்கள் அப்பா பெயரில் உள்ளது என்றால் ஆமாம். அ அட்டவணை சொத்து அப்பா பெயரிலும், ஆ அட்டவணை சொத்து அம்மா பெயரிலும் உள்ளது என்றால் ஆமாம். எனது அப்பா 2006 ஆம் ஆண்டு உயில் எழுதி வைத்தார் என்றால் இல்லை. அ. எண் 281/23 நான் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அ.எண் 281/23 வழக்கில் 2006 வது ஆண்டு எனது அப்பா உயில் எழுதி வைத்தார் அந்த பத்திரப்படி நான் வீடு கட்டி அனுபவித்து வருகிறேன் என்று அந்த வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை.

அந்த வழக்கை நான் மேல் நடத்தாமல் வாபஸ் வாங்கிகொண்டேன் என்றால் இல்லை. நான் குடியிருக்கும் வீட்டின் புல எண் என்ன என்றால் தெரியாது அப்பா பெயரில்தான் உள்ளது. புல எண் 196 எ/11 இல் நான் 2.5 சென்ட்டில் மட்டும் உள்ளேன் என்றால் சரியல்ல. உயில்படி அவர்அவர்கள் பெயரில் பட்டா மாறிவிட்டதா என்றால் உயில் எழுதவில்லை. வருவாய் ஆவணங்கள் உயில் படி பெயர் மாறிவிட்டது என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அம்மா 5.4.2005 இல் ஒரு உயில் எழுதியுள்ளார் என்றால் இல்லை. மேற்படி இரண்டு உயில்களும் எனக்கு தெரிந்துதான் ஏற்பட்டது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. ஆரோக்கியசாமிசுந்தரம் வீடுகட்டி குடியிருக்கும் மனைக்குபோகும் வழியை நான் மறைத்து தொந்தரவு செய்தேன் என்றால் இல்லை. ரோட்டின் கிழக்கு பக்கம் ஆரோக்கியசாமிசுந்தரம் வீடு உள்ளது என்றால் ஆமாம். அவர் வீடு பாதுகாப்புக்கு அவர் போட்டிருந்த வேலியை எடுத்துபோட்டுவிட்டோம் என்றால் இல்லை. அவர் வீட்டிற்கு செல்லும் வழியில் வெளியே போக முடியாதபடி அடைத்து வைத்துள்ளோம் என்றால் அவர்கள் எங்களை அப்படி வைத்துள்ளார்கள். இரண்டு உயில்களும் எனக்கு தெரியும் என்றும் அதை நான் ஏற்றுகொண்டேன் என்றும் அதன்பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. பாகம் கிடைக்ககூடியதல்ல என்றும் ஏற்கனவே பிரிக்கபட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. ஆரோக்கியசாமிசுந்தரத்தை நான் தொந்தரவு செய்கிறேன் என்றும் அதற்கு எதிராக அவருக்கு பரிகாரம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN
Digitally signed by NAGARAJAN
Date: 2026.01.19 18:30:36 +0530

2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.